தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்
Madurai Edition - 23.09.2023

தூத்துக்குடி துப்பாக்கிச்சூடு சம்பவம் தொடர்பான

# தேசிய மனித உரிமை ஆணையத்தின் அறிக்கை கிடைத்துள்ளதா?

## தமிழ்நாடு அரசுக்கு ஐகோர்ட்டு கேள்வி

சென்னை, செப்.23- தூத்துக்குடி துப்பாக்கிச் சூடு சம்பவம் தொடர்பாக தேசிய மனித உரிமை ஆணையத்தின் புலன் விசாரணை பிரிவின் அறிக்கை கிடைத்துள்ளதா என்று தமிழ்நாடு அரசுக்கு ஐகோர்ட்டு கேள்வி எழுப்பியுள்ளது.

### துப்பாக்கிச்சூடு

தூத்துக்குடியில் ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிராக கடந்த 2018-ம் ஆண்டு பொதுமக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது போலீசார் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் 13 பேர் பரிதாபமாக பலியானார்கள். இச்சம்பவம் தொடர்பாக தேசிய மனித உரிமை ஆணையம் தாமாக முன்வந்து வழக்கை விசாரணைக்கு எடுத்தது.

பின்னர், தேசிய மனித உரிமை ஆணையத்தின் புலனாய்வு பிரிவு இந்த சம்பவம் குறித்து விசாரணை நடத்தி அறிக்கையை தாக்கல் செய்தது. இந்த அறிக்கையின் அடிப்படையில், தாமாக முன்வந்து விசாரணைக்கு எடுத்த வழக்கை தேசிய மனித உரிமை ஆணையம் முடித்துவைத்தது.

### அறிக்கை தாக்கல்

அதை எதிர்த்து மதுரையைச்சேர்ந்த வக்கீலும், மனித உரிமை ஆர்வலருமான ஹென்றி திபேன் சென்னை ஐகோர்ட்டில் வழக்கு தொடர்ந்திருந்தார். அந்த மனுவில், தூத்துக்குடி துப்பாக்கிச் சூடு சம்பவம் தொடர்பாக நான் அளித்த புகாரின் அடிப்படையில், மீண்டும் விசாரிக்க தேசிய மனித உரிமை ஆணையத்துக்கு உத்தரவிட வேண்டும் என்று கோரியிருந்தார்.

இந்த வழக்கு விசாரணையின்போது, தேசிய மனித உரிமை ஆணையம், தாமாக முன்வந்து எடுத்த வழக்கின் விசாரணையை முடித்த வைத்த உத்தரவையும், புலன் விசாரணை பிரிவு அறிக்கையையும் மூடிமுத்திரையிடப்பட்ட உறையில் தாக்கல் செய்தது.

### நடவடிக்கை இல்லை

இந்த வழக்கு நீதிபதிகள் ஜெ.நிஷா பானு, என்.மாலா ஆகியோர் கொண்ட டிவிசன் பெஞ்சில் நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது மனுதாரர் ஹென்றி திபேன் ஆஜராகி, 'ஐகோர்ட்டு ஓய்வு பெற்ற நீதிபதி அருணா ஜெகதீசன் தலைமையில் விசாரணை ஆணையம் அமைத்தது, துப்பாக்கிச்சூட்டில் பலியானவர்களின் குடும்பத்துக்கு தலா 20 லட்சரூபாய் இழப்பீடு வழங்கியது ஆகியவை குறித்து தமிழ்நாடு அரசு தாக்கல் செய்த அறிக்கையை ஏற்றுக் கொண்டு, இதற்கு மேல் நடவடிக்கைதேவையில்லை என்று கூறி தாமாக முன்வந்து விசாரணைக்கு எடுத்த வழக்கை தேசிய மனித உரிமை ஆணையம் முடித்துவைத்துள்ளது.

அதேநேரம், ஓய்வுபெற்ற நீதிபதி அருணா ஜெகதீசன் ஆணையத்தின் விசாரணை அறிக்கையின்படி தமிழ்நாடு அரசு எந்த நடவடிக்கையும் இதுவரை எடுக்கவில்லை. அதனால், விதிகளை மீறி தேசிய மனித உரிமைகள் ஆணையம் வழக்கை முடித்துவைத்துள்ளதால், அதுசம்பந்தமான உத்தரவை ரத்துசெய்ய வேண்டும்' என்று வாதிட்டார்.

### மீண்டும் அணுகலாம்

ஆணையத்தின் தரப்பில் ஆஜரான வக்கீல், 'புதிதாக ஆதாரங்கள் ஏதாவது இருந்தால் மனுதாரர் மீண்டும் அணுகலாம் என தேசிய மனித உரிமை ஆணையம் ஏற்கனவே உத்தரவிட்டுள்ளது. ஆணையத்தின் புலன் விசாரணை பிரிவு அளித்த அறிக்கையை பொதுமக்கள் பார்வைக்கு வெளியிடுவது என்பது ஆணையத்தின் தனிப்பட்ட அதிகாரம்' என்று வாதிட்டார்.

அதையடுத்து, சீலிட்ட கவரில் இருந்த அறிக்கைகளை நீதிபதிகள் படித்து பார்த்தனர். பின்னர், 'தேசிய மனித உரிமை ஆணையத்தின் விசாரணை அறிக்கை மற்றும் புலன் விசாரணை பிரிவின் அறிக்கை தமிழ்நாடு அரசுக்கு கிடைத்துள்ளதா?' என்று கேள்வி எழுப்பினர்.

### அரசு பதில்

அதற்கு அரசு தரப்பு வக்கீல், இதுகுறித்து அரசிடம் கேட்டு பதில் அளிப்பதாக கூறினார். அதை ஏற்றுக்கொண்ட நீதிபதிகள், வழக்கு விசாரணையை வரும் 27-ந் தேதிக்கு தள்ளி வைத்தனர். மேலும் இந்த அறிக்கைகள் கிடைத்து இருந்தால், அதன் மேல் எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து தமிழ்நாடு அரசு பதில் அளிக்க வேண்டும் என்று உத்தரவிட்டனர்.